சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறை ஆணை

ந.க.எண். 7056/அ2/2025 நாள். 31.10..2025

| | | |
|---|---|---|
| பொருள் | | தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை- அமைச்சுப் பணி - சென்னை மாவட்டம் - சைதாப்பேட்டை, சென்னை தெற்கு, மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை) - இளநிலை உதவியாளர் - திருமதி ரா.சுபஸ்ரீ - என்பாருக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பு. |
| பார்வை | 1 | அரசாணை எண்:151 பள்ளிக்கல்வி(SE1-1) துறை, நாள்:09.09.2022 |
| | 2 | சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் :07347/ அ2/2023, நாள்:27.09.2023 |
| | 3 | சென்னை -15, சைதாப்பேட்டை, சென்னை தெற்கு, மாவட்டக் கல்வி அலுவலரின் (இடைநிலை) கடிதம் , ந.க.எண் :4222/ அ1/2025 நாள்:23.10.2025. |

************************

சென்னை -15, சைதாப்பேட்டை, சென்னை தெற்கு, மாவட்டக் கல்வி அலுவலகத்தில்(இடைநிலை) இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி ரா.சுபஸ்ரீ என்பார் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV மூலம் நேரடி நியமனம் பெற்று பார்வை 2 ல் காண் செயல்முறைகளின் படி 29.09.2023 அன்று முற்பகல் சென்னை -15, சைதாப்பேட்டை, சென்னை தெற்கு, மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (இடைநிலை) இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார். மேற்காண் பணியாளர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV மூலம் நேரடி நியமனம் செய்யப்பட்டதாலும், அன்னாரின் பணிவரன்முறை கோரிய கருத்துருவில் கல்விச் சான்றுகளின் உண்மைத்தன்மை அறியப்பட்டுள்ளதாலும், அரசாணை எண்:151 பள்ளிக்கல்வி(SE1-1) துறை, நாள்:09.09.2022 ன் படி முதன்மைக்கல்வி அலுவலருக்கு நியமன அலுவலராக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எ ண் | பெயர்/பதவி/திரு/ திருமதி/செல்வி | பணிபுரியும் அலுவலகம்/பள்ளி | இளநிலை உதவியாளர் பணியில் முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி ரா.சுபஸ்ரீ இளநிலை உதவியாளர் | மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை), சென்னை தெற்கு, சைதாப்பேட்டை, சென்னை -15 | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

Scanned with OKEN Scanner

இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.

1. பணிவரன்முறை செய்யப்பட்ட இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

2. இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

இணைப்பு. அசல் பணிப்பதிவேடு

31.10.25

முதன்மைக்கல்வி அலுவலர்(பொ)

சென்னை

பெறுநர்

1. சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக )

31/10/2025

நகல்:

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை),, மாவட்டக் கல்வி அலுவலகம் , சென்னை தெற்கு, சைதாப்பேட்டை, சென்னை -15

2 . பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner